1978 மார்ச் 28]

6. அறிக்கை அளித்தல்

சட்ட விதிகளின் ஆய்வுக் குழுவின் முதலாவது, இரண்டாவது அறிக்கைகள்—அளித்தல்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பொ. விஜயராகவன், சட்ட விதிகள் ஆய்வுக்குழுவின் உறுப்பினர் மேற்படி குழுவின் முதலாவது மற்றும் இரண்டாவது (ஆறுவது சட்டமன்றப் பேரவை) அறிக்கைகளை அளிப்பார்.

திரு. பொ. விஜயராகவன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் முதலாவது மற்றும் இரண்டாவது அறிக்கைகளைக் குழுத்தலைவரின் சார்பாக இந்தப் பேரவைக்கு அளிக்கிறேன்.

4. தகவல் கோரல் (தொடர்ச்சி)

(ஆ) கிராம உத்யோகஸ்தர்கள் சங்கத்தின் போராட்டம் குறித்து அரசு அறிக்கை அளிப்பது குறித்து.

திரு. துரை முத்துச்சாமி: பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு நிதியமைச்சரவர்கள் கிராம உத்தியோகஸ்தர்கள் சங்கம் நடத்துகின்ற போராட்டம் சம்பந்தமாக இன்றையதினம் அறிக்கை கொடுப்பதாக சட்டமன்றத்திலே சொன்னார்கள். அதை அறிவிக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, நான் இன்றைக்கு அறிவிப்புத் தருவதாகச் சொல்லவில்லை. பத்திரிகையிலே செய்தி வந்தது என்றால் அதற்கு நான் பொறுப்பாளி அல்ல.

7. அரசினர் சட்டமுன்வடிவுகள்.

(அ) தமிழ்நாடு 1978ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்ச வரம்பு கட்டுதல்) (திருத்த) சட்டமுன்வடிவு.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, தமிழ்நாடு 1978ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்ச வரம்பு கட்டுதல்) (திருத்த) சட்டமுன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகப் படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகப் படுத்தப் பெற்றிருக்கிறது.

(ஆ) தமிழ்நாடு, 1978ஆம் ஆண்டு, நகர்ப்புற நில (உச்ச வரம்பு கட்டுதல், முறைப்படுத்துதல்) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, 1978ஆம் ஆண்டு, நகர்ப்புற நில (உச்ச வரம்பு கட்டுதல், முறைப்படுத்துதல்) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இச் சட்ட முன்வடிவு அறிமுகப் படுத்தப் பெற்றிருக்கிறது.

8. 1978-79-ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும் (தொடர்ச்சி),

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாநிலச் சட்ட மன்றம் பற்றிய விவாதத்தினுடைய தொடர்ச்சி இருக்கிறது. அதற்கடுத்து தேர்தல்கள் என்ற மானியக் கோரிக்கை இருக்கிறது. அதையடுத்து மானியக் கோரிக்கை 9 இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த மூன்று மானியக் கோரிக்கைகளையும் மொத்தமாகச் சேர்த்து வைத்துக் கொள்ளலாம் என்று பேரவையின் அனுமதியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

(அ) கோரிக்கை எண் 7—சட்டமன்றம் (தொடர்ச்சி.)

(ஆ) கோரிக்கை எண் 8—தேர்தல்கள்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, முதலமைச்சரின் சார்பாக ஆளுநர் அவர்களின் பரிந்துரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:—

''மானியக் கோரிக்கைஎண் 8—தேர்தல்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ 23,38,000க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''